UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# திருக்குறள் பொருட்பாலில் உயர்திணை வினைகள்

**மு. வினிதா**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் ஜெ. தேவி**
பேராசிரியர், மற்றும் தலைவர் இலக்கியத்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் -10

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதப் பரிணாம வளர்ச்சியில் மிகவும் இன்றியமையாத ஒன்றாக விளங்கும் மொழியில் மொழி குறித்த ஆய்வு என்பது அவசியமான ஒன்றாகும். மொழிக்கு அடிப்படை எழுத்து மற்றும் சொல்லாகும். பொருள் தரக்கூடிய பல எழுத்துக்கள் சேர்ந்து சொல்லாக உருவெடுத்து இன்று மொழியாக பல இடங்களில் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகின்றன. எழுத்துகள் இவ்வுலகில் நிலைபெற்ற விளங்கும் அளவிற்கு சொற்கள் நிலை பெற்று விளங்குவதில்லை. நாளுக்கு நாள் சொல்லில் மாற்றம் திகழ்ந்த வண்ணம் உள்ளன. சொற்களே ஒரு மொழியின் வளர்ச்சிக்கு ஊன்று கோலாக இருப்பதை அறிந்தே மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளனர் அறிஞர்கள். சொல்லின் பழைமையும் ஆழமும் மொழியின் வளமையைத் தீர்மானிப்பதால் இவ்வாய்வு மொழிக்கு வலுவூட்டும் சொற்களுக்கு இடமளித்து, குறிப்பாக வினைச்சொல்லை ஆராயவுள்ளது. நாம் பயன்படுத்தும் சொற்களுள் செயலைக் குறிக்கும் சொற்களே அதிகமாக உள்ளன. இதனைப் பெயர்ச் சொற்களால் நாம் அறிய இயலாது. வினையின் வழியே அறிந்து கொள்ள இயலும் என்பதால் இவ்வாய்வு வினைச்சொல்லை நோக்கமாகக் கொண்டு, குறுகிய அடியில் மிக நேர்த்தியாக எழுதப்பட்டுள்ள வள்ளுவரின் திருக்குறளுள் பொருட்பாலில் ஆராயவுள்ளது. உயர்திணை வினைகளை வள்ளுவர் கையாண்ட திறமும், உயர்திணைக்கான வினையின் செயல்பாடுகள் மற்றும் தன்மைகளை வள்ளுவர் நெறிப்படுத்தும் முறைமைகளும் இவ்வாய்வு கட்டுரை நோக்கப்படவுள்ளன.

**முதன்மைச் சொற்கள்**

உயர்திணை வினை, தெரிநிலைவினைமுற்று, குறிப்பு வினைமுற்று, வினை ஈறுகள்

**முன்னுரை**

திராவிட மொழிகளின் பால்பாகுபாடு என்பது பகுத்தறிவின் உச்சகட்டம் என்று கால்டுவெல் சொல்வதுபோல் தமிழ் மொழியின் திணைப் பாகுபாடும் வியக்கத்தக்க ஒன்றாகும். தொல்காப்பியர் திணைப் பாகுபாட்டில் உயர்திணை என்பதை மக்கட் சுட்டு என்று கூறுகிறார். அவ்வழியில் வள்ளுவர் சுட்டும் உயர்திணை வினைகளை ஆராய்ந்து திணை, பால், எண் முறைகளைப் பகுத்தால் தொல்காப்பியர் கூறும் வினையியல் இலக்கணத்தைப் பொருத்திப் பார்க்க இயலும். மேலும், உயர்திணைக்கான செயல்பாடுகளை எத்தன்மையில்

வள்ளுவர் உரைக்கிறார் என்பதை நோக்கினால் வள்ளுவர் கூறும் கருத்தியல்களைப் புரிந்து கொள்ளலாம். திருக்குறளானது முழுக்க முழுக்க நீதியையும் அறத்தையும் கற்பிக்கும் நூலாகும் என்பதால், அதனைச் சொல்லும் முறையில் வள்ளுவர் உயர்திணை வினைகளை எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதைத் தொல்காப்பிய நோக்கில் இக்கட்டுரை ஆராய்ந்து விளக்கவுள்ளது.

**உயர்திணை வினைகள்**

**ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்**

**பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி**

**அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே"** (தொல். சொல். 2)

உயர்திணை என்பவை மனிதர்கள் மற்றும் மனிதர்க்கும் மேம்பட்டவர்களான கடவுள், தேவர், அரசர், அறிஞர்களைக் குறிக்கும் சொற்களாகும். திருக்குறளில் உயர்திணைக் கான வினைகள் மூலம் மனித சமுதாயத்திற் காக வள்ளுவர் கூறும் மனித செயல்கள், செய்பவரின் தன்மை, இலக்கணக்கூறுகள் போன்றவற்றை அறிந்து கொள்ளலாம். வள்ளுவரின் உயர்திணை வினைகள் மூலம் ஒரு செயலுக்குரியவர் ஒருமையா? பன்மையா? என்பதையும் செயலுக்கான காலநிலைகளை எது? என்பதையும் தொல் காப்பிய திணை, பால், எண் முறையில் உற்றுநோக்க இயலும்.

**உயர்திணை தன்மை வினைமுற்று**

வினைகளை வினைஈறுகளின் அடிப்படையில் ஒருமை, பன்மை, ஆண்பால், பெண்பால், பலர்பால் என்று பிரித்தறிய முடியும். மேலும், காலங்களை வெளிப்படையாகவும் குறிப்பாக வும் காட்டும் வினைமுற்றுச் சொல்லின் கால இடைநிலைகளைப் பொருத்து அவற்றை தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என வகைப்படுத்தலாம். அவ்வகையில் கு, டு, து, று ஏன், ஏல், அல் என்ற விகுதிகள் உயர்திணை தன்மை தெரிநிலை வினை முற்று விகுதிகள் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

திருக்குறள் பொருட்பாலில் காணுங்கால் **கு, டு, து, று** என்னும் எதிர்காலம் காட்டும் தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் இடம்பெறவில்லை. **'அல்'** **ஈறு** **'அன்'** ஈறாக மாற்றமடைந்தது குறித்து இளம்பூரணர் **அல்** –உண்பல், திண்பல் என எதிர்காலம் பற்றி வரும். இப்பொழுது அதனை உண்பன், திண்பன் என **அன்** ஈறாக வழங்குப என்ப என்று குறிப்பிடுகிறார். இதனை **இரவச்சம்** என்னும் அதிகாரத்தில் காணமுடிகிறது.

**இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற்**

**கரப்பா ரிரவன்மி னென்று** (குறள் - 1067)

இக்குறளில் **இரப்பன்** என்பது **உயர்திணை தன்மை ஒருமை தெரிநிலை வினைமுற்று** ஆகும். இங்கு வள்ளுவர் இரந்து வாழ்பவரை எல்லாம் இரவாது வாழ்க என்றும், யாசிப்ப வரையெல்லாம் யான் யாசிக்கிறேன் என்று கூறும் தன்மை நிலை மற்ற குறள்களுக்கு இல்லாத சிறப்பாகக் கருதப்படுகிறது.

அடுத்ததாக என், ஏன் விகுதியை ஆராய்ந்த வழி **என்** விகுதி திருக்குறள் பொருட்பாலில் இடம்பெறவில்லை **'ஏன்'** விகுதி எதிர்மறை வினையாக இரண்டு இடங்களில் காணப் படுகிறது.

**களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்**

**தொளித்ததூஉ மாங்கே மிகும்** (குறள்-928)

**களித்தறியேன்** – என்பது **உயர்திணைத் தன்மை ஒருமை வினைமுற்று** ஆகும். நான் கள்ளைப் பற்றி அறிந்ததில்லை என்று ஒருவன் தன்னைப் புகழ்ந்து கூறுவதாக வள்ளுவர் கூறுகிறார். கள் உண்ணுதல் என்பது மதியை மயங்க வைக்கும் தீய செயல் என்பதாலும், தனிப்பட்ட ஒழுக்கம் சார்ந்த செயலாக இருப்பதாலும் தனி ஒருவனைக் குறிக்கும் பொருட்டு அறிவேன் என்று ஒருமைத் தன்மையில் கூறியுள்ளார்.

குறிப்பு வினைகளைக் கால அடிப்படையில் எக்காலம் என்று பிரித்தறிய இயலாது. ஆறாம் வேற்றுமைக்குரிய உடைமைப் பொருளிலும், ஏழாம் வேற்றுமைக்குரிய நிலப்பொருள், ஒப்புமைப் பொருள் மற்றும் பண்புப் பொருளிலும் குறிப்பு வினைகள் அமையும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

அம், ஆம், எம், ஏம், என், ஏன் போன்றவை உயர்திணைத் தன்மை குறிப்பு வினைமுற்று வினைகள் ஆகும். அவ்வகையில் திருக்குறள்

**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

பொருட்பாலில் அம் விகுதி உடைய உயர் திணை வினைகளே காணப்படுகின்றன.

**இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலமென்னும் நல்லாள் நகும்.** (குறள் -1040)

இங்கு **இலம்** என்பது உயர்திணை தன்மைக் குறிப்பு வினைமுற்று ஆகும். தனது உழைப்பால் உயராமல் சோம்பலாக இருந்து கொண்டு தன்னிடம் பொருள் இல்லை என்று சொல்வாரை வள்ளுவர் தன்மையில் குறிப்பாகச் சுட்கிறார்.

இதேபோல், **இன்னம்** (குறள்-790), **உடையம்** (குறள்-844), **நுண்ணியம்** (குறள்-710), **பழையம்** (குறள்-700), **வள்ளியம்** (குறள்-598) என்ற ஐந்து இடங்களில் உயர்திணைத் தன்மைக் குறிப்பு வினைமுற்றுகள் இன்மை, உண்மைப் பொருளில் தொல்காப்பிய விதிப்படி வருகின்றன.

**அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின்**
**அன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்**
**என்ன கிளவியுங் குறிப்பே காலம்**
(தொல். சொல். 214)

### உயர்திணைத் தன்மைப் பன்மை வினைமுற்று

உயர்திணைத் தன்மைப் பன்மை வினைகள் செயலைச் செய்தவரோடு அங்குள்ள பிறரையும் உளப்படுத்துவதற்காகப் பயன் படுகின்றன. அம், ஆம், எம், ஏம், கும், தும், டும். றும் என்பவை தெரிநிலை தன்மைப் பன்மை வினைமுற்றுகளுக்குரிய விகுதிகள் எனத்தொல்காப்பியம் சுட்டுகின்றது.

**அம்** எனும் மூன்று காலத்தை உணர்த்தும் தெரிநிலை தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி திருக்குறள் பொருட்பாலில் ஒரு சொல்லில் மட்டுமே அமைந்துள்ளது. **எண்ணுவம்** (குறள்-467) என்ற வினைமுற்றுச் சொல் அரசியல் இயலில் **தெரிந்து செயல் வகை** அதிகாரத்தில் எதிர்காலத்தைக் காட்டும் சொல்லாக அமைந்துள்ளது. இக்குறளில் ஒரு நாட்டைக் காக்கும் அரசனது வினைகளைத் தன்மையாகக் கூறாமல் அரசனுடன் இணைந்து செயலாற்றுபவர்களையும் வள்ளுவர் கூறுகிறார்.

**ஏம்** விகுதியுடன் கூடிய **உயர்திணை தன்மை தெரிநிலை வினைமுற்று** சொற்களுள் 5 சொற்கள் இறந்த காலத்திலும் 3 சொற்கள் எதிர்காலத்தையும் உணர்த்துகின்றன. எதிர்காலம் மற்றும் நிகழ்காலம் குறித்து வரும் கும், டும், தும், றும் என்னும் நான்கு தெரிநிலை தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகளில் 'தும்' விகுதி மட்டும் 2 இடங்களில் வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார்.

### உயர்திணைப் படர்க்கை ஒருமை வினைமுற்று

தொல்காப்பியம் **அன், ஆன், அள், ஆள்** என்னும் நான்கை உயர்திணைத் தெரிநிலைப் படர்க்கை ஒருமை வினைமுற்று விகுதிகளா கவும், **அர், ஆர், ப, மார்** எனும் விகுதிகளை உயர்திணைத் தெரிநிலைபடர்க்கைப் பன்மை வினைமுற்றுகளாகச் சுட்டுகிறது. அவ்வகை யில் **ஆன்** என்னும் ஆண்பாலுக்குரிய விகுதிகள் திருக்குறள் பொருட்பாலில் 11 இடங்களில் வந்துள்ளன.

**அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்**
**தஞ்சம் எளியன் பகைக்கு.** (குறள் - 863)

இக்குறளில் **அறியான்** மற்றும் **ஈகலான்** என்னும் சொற்கள் உயர்திணைப் படர்க்கை ஒருமை தெரிநிலை வினைமுற்று ஆகும். இது பகைமாட்சி என்னும் அதிகாரத்தில் போரில் தாக்குபவரை எதிர்க்கும் தன்மை, அறிவினால் தற்காக்கும் பண்பினை இல்லாதவனைக் குறிப்பிடுவதால் உயர் திணைப்படர்க்கை ஒருமை வினைமுற்றாக வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

**அள், ஆள்** விகுதி பெற்ற தெரிநிலை படர்க்கை ஒருமை வினைமுற்றுச் சொற்கள் திருக்குறள் பொருட்பாலில் இல்லை.

### உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று

அர், ஆர், ப, மார் எனும் விகுதிகளை உயர்திணைப் பன்மை தெரிநிலை வினை முற்றாகத் தொல்காப்பியம் சுட்டுகிறது. '**அர்**' விகுதி கொண்ட உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று 33 சொற்களில் மூன்று காலங்களை உணர்த்தி திருக்குறளில் வந்துள்ளது. "**ஆர்**" விகுதி 39 இடங்களில் மூன்று காலங்களிலும் எதிர்மறைப் பொருளில் வள்ளுவர் கூறியுள்ளார்.

எதிர்காலம் சுட்டும் **'ப' கர** விகுதி பெற்ற வினைமுற்றுச் சொற்கள் திருக்குறள் பொருட்பாலில் 3 சொற்களில் வந்துள்ளது. **மார்** விகுதி பெற்ற படர்க்கைப் பன்மை வினைமுற்று சொற்கள் திருக்குறள் பொருட்பாலில் இடம்பெறவில்லை.

### உயர்திணைப் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று

அன், ஆன், அள், ஆள், அர், ஆர் எனும் ஆறு விகுதிகள் உயர்திணைப் **படர்க்கைக்** குறிப்பு வினைமுற்று விகுதிகளாகும். திருக்குறள் பொருட்பாலில் **'அன்'** விகுதி பெற்ற குறிப்பு வினைமுற்று 3 சொற்களில் வந்துள்ளது. **எளியன்** (குறள் - 863), **கடியன்** (குறள்-564) எனும் சொற்கள் பண்புப் பொருளிலும் **இலன்** (குறள்–414,566,628,629, 647,862,865,868,1025)எனும் சொல் இன்மைப் பொருளிலும் வந்துள்ளது.

**'ஆன்'** மற்றும் **ஆள்** விகுதி வினைமுற்றுச் சொற்கள் இடம்பெறவில்லை. **'ஆள்'** விகுதி பெற்ற குறிப்பு வினைமுற்றுச் சொல் **'உளாள்'** (குறள்-617) **எனும்** சொல்லில் உண்மைப் பொருளில் வந்துள்ளது. **'அர்'** ஈற்று குறிப்பு வினைமுற்றுச் சொல் 11 இடங்களில் வந்துள்ளது. **'ஆர்'** விகுதி 5 இடங்களில் உயர்திணைப் படர்க்கைப் பன்மை குறிப்பு வினைமுற்று விகுதிகளாக வந்துள்ளது.

### முடிவுரை

திருக்குறள் பொருட்பாலில் உயர்திணை வினைகளைத் தொல்காப்பிய நோக்கில் ஆராய்ந்த வழியில் பல்வேறு முடிவுகளைப் பெற முடிகிறது. உயர்திணை வினைகளைத் தன்மை ஒருமை, தன்மைப் பன்மை, படர்க்கை ஒருமை, படர்க்கைப் பன்மை என்று தொல்காப்பியார் வழியில் பகுக்க இயலுகிறது. தொல்காப்பியம் கூறும் வினை ஈறுகளைத் திருக்குறள் பொருட்பாலில் ஆய்வு செய்த வகையில் பெரும்பாலான சொற்கள் பொருந்தி நிற்பதைப் பெறமுடிகிறது. வள்ளுவர் தன்மை, படர்க்கை வினைகளை மட்டுமே கூறுகிறார். முன்னிலை வினைமுற்று வினைகளை ஆராய்ந்த வழியில் வள்ளுவர் உயர்திணை வினையில் முன்னிலை இடத்தைப் பயன்படுத்தாத நிலை புலப் படுகிறது. தொல்காப்பியரும் முன்னிலை வினைகளை விரவுத்திணையில் மட்டுமே கூறுகிறார். வள்ளுவர் கையாண்டுள்ள ஒருமை, பன்மை உயர்திணை வினை முற்றுகள் மூலம் சமுதாய விழுமியச் செய்தி கள் இக்கட்டுரை வழிப் பெறப்படுகின்றன. மேலும், இதனைக் கருத்து வடிவில் ஆராய்ந்தால் தனிமனித ஒழுகலாறுகள் மற்றும் ஒட்டுமொத்த மனிதனின் செயல் பாடுகளைப் பகுத்தறிந்து திருக்குறளின் அறக்கருத்துகளை இலக்கண வழியில் கூறுவதை அடுத்தக்கட்ட ஆய்வின் வளர்ச்சியாக எடுத்துக் கொள்ளலாம்.

### துணைநின்ற நூல்கள்

1. பரிமேலழகர் (உ.ஆ)-திருக்குறள் மூலமும் பரிமேலழகரையும், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்., சென்னை - 18.
2. ஞா.தேவநேயப்பாவாணர் (உ.ஆ) – திருக்குறள் தமிழ் மரபுரை, சாராதா பதிப்பகம், சென்னை.
3. இளம்பூரணனார் (உ.ஆ) – தொல் காப்பியம் சொல்லதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை - 14, முதற்பதிப்பு, மே - 2005
4. சேனாவரையர் (உ. ஆ) – தொல்காப்பியம் சொல்லதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை. முதற் பதிப்பு – 2005
5. சண்முகம் செ.வை - சொல்லிலக்கணக் கோட்பாடு, தொல்காப்பியம் முதல் பகுதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை- 113. முதல் பதிப்பு – 1984
6. சிவலிங்கனார் (ப.ஆ) - தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைவளம் (வினையியல்), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 13
7. முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ் - பழந்தமிழ் வடிவங்கள் மீள் பார்வை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.